**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.98/2026 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 4 |
| Name | : | சக்கரவர்த்தி, வயது 26 |
| Father Name/Husband Name | : | வரதராஜன் |
| Village | : | சாத்தூர் |
| Taluk | : | சாத்தூர் |
| Calling | : | பள்ளி கற்பித்தல் ஒருங்கிணைப்பாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of July 2026.

**(Accused absent. 317 CrPC petition filed and allowed).**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது சாத்தூரில் வசித்து பள்ளி கற்பித்தல் ஒருங்கிணைப்பாளராக இருந்து வருகிறேன். ஆஜர் இல்லாத எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 யை எனக்கு தெரியும். கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியில் உள்ள அ.சா.1 ன் அறையில் project review விற்காக என்னை, அ.சா.3, எதிரியை அ.சா.1 வரசொல்லியிருந்தார். 04.03.2024 ஆம் தேதி மதியம் சுமார் 02.10 மணியளவில் நாங்கள் மூவரும் அ.சா.1 ன் அறைக்கு சென்றோம். Project review சம்பந்தமாக final document யை அ.சா.1 கேட்டதால் நானும், அ.சா.3 ம் சமர்பித்துவிட்டு வெளியே வந்தோம்.

2. நாங்கள் இருவரும் வெளியே வந்தபோது அ.சா.1 ன் அறையில் எதிரி இருந்தார். அப்போது அ.சா.1 ன் அறையில் சத்தம் கேட்டது. நானும், அ.சா.3 ம், அ.சா.1 ன் அறைக்குள் சென்று சத்தத்தைக் கேட்டு பார்த்தபோது எதிரி, அ.சா.1 ன் முகத்தில் கையால் அடித்தார். மேலும் எதிரி கம்ப்யூட்டர் கிபோர்டிலும் அடித்தார். நாங்கள் இருவரும் சேர்ந்து எதிரியையும், அ.சா.1 யையும் பிரித்து விடுவதற்கு முயற்சி செய்தோம். சத்தம் கேட்டு ஜெயவெங்கடேஷ் என்ற சாரும், பெயர் தெரியாத இன்னொரு சாரும் வந்தார்கள். பின்பு நாங்கள் உதவி செய்து இருவரையும் பிரித்து வெளியே அழைத்து வந்தோம். பின்பு கல்லூரி நிர்வாகத்தினர் வந்து என்னிடமும், அ.சா.3, எதிரியிடமும்

என்ன நடந்ததது என்று கேட்டு எழுதி வாங்கினார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3. நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். தலை மற்றும் முகம் வெவ்வேறு பகுதி என்றால் தலையில்தான் முகம் உள்ளது, தலை, முகம் என்று பிரித்து கேள்வி கேட்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் அ.சா.1 ன் ஆடைகள் கிழிந்திருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை ஆனால் அ.சா.1 ன் ஆடைகளின் மேல் பகுதியில் கசங்கி இருந்ததது. பொதுவாக பிரித்து விடுவது என்பது சண்டை போடும் இருநபர்களை தான் பிரித்து விட முடியும் என்றால் சரிதான்.

4. நான் எனது முதல் விசாரணையில் நானும், அ.சா.3 ம், இரண்டு சார்களும் சேர்ந்து அ.சா.1 மற்றும் எதிரியை பிரித்து விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 ன் அறை கேபின் அளவு உடையது, நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து வெளியே வரும்போது எதிரி மட்டும் வெளியே வராமல் திரும்ப உள்ளே சென்று அ.சா1.யை அடித்தார், அதை நான் எனது கண்ணால் பார்த்தேன். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் நான் சத்தம் கேட்டு பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல, நான் சத்தம் கேட்டுதான் சென்றேன், நான் வெளியே வந்தபோது முதல் அடியை பார்க்கவில்லை, எதிரி, அ.சா.1 யை அதன் பிறகு அடித்ததை பார்த்தேன், எதிரி, அ.சா.1 யை அடித்ததை ஒப்புக்கொண்டு HOD சாரிடம் எழுதி கொடுத்தார். எதிரி எழுதி கொடுத்ததை போலீசாரிடம் கொடுத்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது.

5. நான் சொல்வது போல் எதிரி, அ.சா.1 யை அடித்ததாக கடிதம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் முன்னுக்கு பின்னாக எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிப்பது பொய்யானது என்றால் சரியல்ல. Project review செய்வதற்காக அ.சா.1 க்கு கல்லூரி நிர்வாகத்திடமிருந்து எழுத்து பூர்வமாக உத்தரவு எதுவும் வரவில்லை என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அ.சா.3 என்னுடன்தான் இருந்தார் என்றால் சரிதான். நான் சொல்வது உண்மையா என்று அ.சா.3 ன் சாட்சியத்திலிருந்து தெரிய வரும் என்றால் சரிதான்.

6. நீங்கள் மூன்று பேரும் கல்லூரிக்கு எவ்வாறு வந்தீர்கள் என்றால் மூன்று பேரும் அவரவர் வீட்டிலிருந்து தனிதனியாக கல்லூரிக்கு வந்தோம். சம்பவத்தன்று semester விடுமுறை இருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவத்தன்று எதிரியை எத்தனை மணிக்கு எங்கு வைத்து பார்த்தீர்கள் என்றால் நேரம் ஞாபகம் இல்லை, வழக்கமாக பார்க்கும் நேரத்தில் எங்களது வகுப்பு அறையில் வைத்து பார்த்தேன். எங்களது கல்லூரியில் வருகை

பதிவேடு உண்டு. அன்றைய தேதியில் நான், அ.சா.3, எதிரி கல்லூரிக்கு வந்தோமா என்று வருகை பதிவேட்டை பார்த்தால் தெரிய வரும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமான விவரங்கள் எங்களது கல்லூரி சிசிடிவி கேமராவில் பதிவாகியிருக்கும் என்றால் சம்பவ இடத்தில் சிசிடிவ கேமராக்கள் இருந்ததா என்று எனக்கு தெரியாது.

7. அந்த கல்லூரியில் நான் இரண்டாண்டுகள் படித்தேன். அந்த கல்லூரியில் நிறைய இடத்தில் சிசிடிவி கேமராக்கள் உண்டு என்றால் எனக்கு தெரியாது. நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் அ.சா.1 ன் கேபினுக்கு செல்லவில்லை என்றாலும், சத்தம் கேட்டு அ.சா.1 ன் அறைக்கு செல்லவில்லை என்றாலும், எதிரி, அ.சா.1 யை தாக்கியதாக சொல்வதை நான் பார்க்கவில்லை என்றாலும், நான், அ.சா.3 மற்றும் இரண்டு சார்கள் சேர்ந்து எதிரி மற்றும் அ.சா.1 யை பிரித்து விடவில்லை என்றாலும், நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 கல்லூரி பேராசிரியர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.